10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 276 சனிக்கிழமை 24 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



வரலாற்றுச் சிறப்புப் பெற்ற கச்சதீவு அந்தோனியார் ஆல யக் கொடியேற்றம் நேற்று இடம்பெற்ற வேளை...

# ஜெனிவா அழுத்தத்தை தணிக்க அரசு முயற்சி

கொழும்பு, பெப்ரவரி 24,

ஜெனிவா மனித உரிமைக் கூட்டத் தொடரில் அழுத் தங்களைத் தணிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடு பட்டுள்ளது. இதற்காக அவசர அவசரமாகப் பயங்கர வாத தடைச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளது.

ஜெனிவாவில் மனித உரிமைகள் கூட்டத்தொடர் எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இம்முறை, அர சுக்கு அதிக அழுத்தங்கள் வழங்கப்படும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், இதை நீர்த்துப் போகச் செய்யும் ஒரு நட வடிக்கையாகப் பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத் தங்களைச் செய்து அதன் பிரதிகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அங்கீகாரத்துக்காக இது மிக விரைவில் நாடாளுமன்றனில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒத்ததாகவே இந்தப் புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்ட நகலும் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## பிரதமர் பதவி நீக்கம்! முயற்சிகளை கைவிடுகிறார் ஜனாதிபதி



கொழும்பு, பெப்.24,

ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவியி லிருந்து நீக்குவது தொடர்பாக உயர் நீதிமன்றத் திடம் விளக்கம் கோர எடுத்த முடிவைக் கைவிட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

06▶

## களைத்து விட்டேன்

### மகிந்த தேசப்பிரிய சொல்கிறார்



கொழும்பு, பெப்.24,

உள்ளூராட்சித் தேர்தல் கள் தம்மைக் களைப்படைய வைத்து விட்டதாகவும், அத னால் தமக்கு ஓய்வு தேவைப்படு வதகவும் தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் மகிந்த தேசப் பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடத்திய ஊடக சந் திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"உள்ளூராட்சித் தேர்தல் கள் தொடர்பான வேலைகளை மேற்கொண்டு நான் மிகவும் களைத்து விட்டேன். இந்த வேலைகளையெல்லாம் யாரி டமாவது கொடுத்து விட்டு, குறைந்தது ஒரு மாதத்துக்கு விடுமுறையில் சென்று ஓய்வெ டுப்பதே நல்லது என நினைக்கிறேன்

06▶

## தேசிய ஒலிம்பிக் குழுத் தலைவராகத் தமிழர்



கொழும்பு, பெப்.24,

தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவராகத் தமிழரான சுரேஷ் சுப்பிரமணியம் தெரிவாகியுள்ளார்.

நேற்று நடந்த தேசிய ஒலிம்பிக் குழுத் தேர்தலிலேயே இவர் தெரிவானார். 9 வருடங்களுக்குப் பின்னர் நடந்த இத்தேர்தலில் ரொஹான் பெர்னாண்டோவை எதிர்த்து சுரேஷ் போட்டியிட்டார்.

இவர் இலங்கை ரென்னிஸ் சங்கத்தின் முன்னாள் தலைவராவார். அத்துடன் ஆசிய ரென்னிஸ் சங்கத்தில் தற்போது பிரதித் தலைவராகப் பணியாற்றி வரு கின்றார். இதேவேளை, தேசிய ஒலிம்பிக் குழுவின் செயலாளராக மெக்ஸ்வெல் டி சில்வா தெரிவாகியுள்ளார். - (இ)



## அரசின் கொள்கை மாறும்! ஐ.தே.கவினர் மத்தியில் ரணில்

கொழும்பு, பெப்.24,

அமைச்சரவையில் மாற்றம் நடை பெறும் அதேவேளை அரசாங்கத்தின் கொள்கைகளிலும் மாற்றங்கள் ஏற்படும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் கள் மற்றும் பிரதியமைச்சர்களை நேற்று அலரி மாளிகையில் சந்தித்த போதே அவர் இதனைக்

06▶

## விசாரிக்காதீர்கள் கோத்தா மனுத்தாக்கல்

கொழும்பு, பெப்.24,

தனக்கு எதிரான வழக்கை விசாரிக்க வேண்டாம் என மீண்டும் மறுபரிசீலனை மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார் கோத்தபாய ராஜபக்ஷ.

அவன்காட் வழக்கிலிருந்து தன்னை விடுவிக்கக் கோரியே அவர் இந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுத் தாக்கல் செய்தார்.

காலி துறைமுகத்தில் மிதக்கும் ஆயு தக் களஞ்சியத்தை நடத்திச் செல்வதற் காக அவன்காட் நிறுவனத் துக்கு அனுமதி வழங்கியதன்

06▶

### கச்சதீவு ஆலயம் செல்வதற்கு

## சிங்களவருக்கே முன்னுரிமை தமிழர் புறக்கணிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், பெப். 24

அந்தோனியார் ஆலயப் பெருவிழாவில் கலந்துகொள்ள கச்சதீவு சென்ற சிங்கள பக் தர்களுக்கே முதலிடம் வழங்கப்பட்டு பட குச் சேவை நடத்தப்பட்டது. இதனால் தமிழ் பக்தர்கள் பலர் நீண்டநேரம் வெயிலில் காத்திருந்ததுடன் சிலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

கச்சதீவு அந்தோனியார் ஆலயப் பெரு விழா நேற்று மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இத்திருவிழாவுக்கான பட குச் சேவையை நடத்தும் பொறுப்பு நெடுந் தீவுப் பிரதேச செயலரிடம் வழங்கப்பட்டது.

இதில் பங்கேற்பதற்காக பெருமளவான பக்தர்கள் காலை 8.30 மணி தொடக்கம் குறிகாட்டுவான் இறங்குதுறையில் கூடினர்.

ஆனால் படகுச் சேவையை கடற்படையி னரே நடத்தினர். அவர்கள், சிங்கள பக்தர் களையே ஏற்றிச் சென்றனர். பிற்பகல் 1.30 மணி வரை தமிழ் பக்தர்கள் எவரையும் கடற்படையினர் ஏற்றிச் செல்லவில்லை.

அதன் பின்னர், சொற்ப தொகையினரை ஏற்றிச் சென்றனர். எனினும் பெருந்தொகையினர் காத்திருந்த

06▶

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# “எந்தக் கட்சியாலும் தனியரசு அமைக்க முடியாது”

ஐ.தே.க.வின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சிங்கள தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டி

மொழியாக்கம்: எஸ்.சுரேஷ்



*கேள்வி: 2015 ஜனாதிபதித் தேர்தலில் நடந்தவற்றையும் இப்போதைய அரசியல் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?*

பதில்: 2015 ஜனாதிபதித் தேர்தலில் நான் ஓர் அரசியல் தீர்மானத்தை எடுத்தேன்.அதற்கு ஒரு காரணம் ஐக்கிய தேசிய கட்சி சார்பில்தான் வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்று நான் எடுத்திருந்த நிலைப்பாடாகும். அதை மறுத்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தியதால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது.

பிரிந்திருந்த ஐக்கிய தேசிய கட்சியை ஒன்றிணைப்பதற்கு நான் அதிகமாகப் பரடுபட்டேன். ஒரு பக்கத்தில் சஜித் பிரேமதாஸ இருந்தார்.அவர் ஐக்கிய தேசிய கட்சிக்குத் தேவைப்பட்ட ஒருவர். அத்துடன் பலமானவரும் கூட.அவரை அணைத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருந்தேன். ஐக்கிய தேசிய கட்சி ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வேண்டும் என்றால் சஜித் அவசியம் என்றேன்.

சஜித் நான்கரை வருடங்களாக ரணிலின் மேடையில் ஏறவில்லை. அவரை ஒன்று சேர்ப்பதற்காக நான் எடுத்த முயற்சியை அடிப்படையாக வைத்து எனக்கு எதிராகப் பிரச்சினைகள் உருவெடுத்தன. சஜித் பிரேமதாச பிரதித் தலைவராகுவதை கட்சிக்குள் பலர் எதிர்த்தனர்.

*கே: அப்படி நீங்கள் அன்பு வைத்த கட்சியில் பிரச்சினை என்றால் அதை விட்டு, வீட்டுக்குச் செல்லாமல் ஏன் எதிராளிக்கு உதவினீர்கள்?*

ப: அரசியலில் இப்படியான சம்பவங்கள் இடம்பெறுவதுண்டு. கட்சியை விட்டு விலகி ஒதுங்கி இருப்பவர்களும் உள்ளனர். எனக்கு அப்போது கட்சியால் இழைக்கப்பட்ட அநீதிகளை அடிப்படையாக வைத்து அவ்வாறான தீர்மானத்தை எடுக்க வேண்டி ஏற்பட்டது.

கட்சியை வெற்றியை நோக்கி நகர்த்துவதற்கு நான் கடும் முயற்சியை எடுத்தேன். அந்தக் கட்சி வெற்றிபெறும்போது நான் கட்சியில் இல்லையே என்று நினைக்கும்போது எனக்குக் கவலையாகத் தான் இருக்கும். ஆனால், நான் அந்தக் கட்சியில் இல்லாதது நல்லது என்று இப்போது நினைக்கின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி கிராமங்களில் உள்ள கட்சியின் ஆதரவாளர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டவில்லை என்று தேர்தல் முடிவுகள் இப்போது கூறுகின்றன. நான் இருந்திருந்தால் ஐக்கிய தேசிய கட்சி அந்த ஆபத்தில் சிக்குவதற்கு இடங்கொடுத்திருக்கமாட்டேன்.

2004 இல் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்த பிறகு 2005 இல் கட்சி சற்று பலமடைந்தது. 2005 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்ததும் பலரும் கட்சியை விட்டுச் செல்லத் தொடங்கினர். கட்சி தோல்வியடைந்தபோதெல்லாம் அதைப் பலப்படுத்துவதற்கே நடவடிக்கை எடுத்தோம். ஆனால், வெற்றி பெற்றதும் தலைவர், எல்லோரையும் மறந்து சிறு குழுவை மாத்திரம் இணைத்துக்கொண்டு ஆட்சி செய்யத் தொடங்கினார்.உயர் வகுப்பினர் ஒன்றிணைந்தே கட்சியை நிர்வகிக்கின்றனர்.

ஐக்கிய தேசிய கட்சி 70 வருட வரலாற்றைக் கொண்டது. அதில் மூன்றில் ஒரு பங்கு காலம் ரணில் தலைவராக இருந்து வருகிறார். ஜனாதிபதியாகும் கனவு அவருக்கு உண்டு. அது பிழையில்லை. ஆனால், ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் அந்த வாய்ப்பை ரணில் தவறவிட்டுக் கொண்டே வந்தார். கட்சியின் முன்னாள் தலைவர்கள் வெற்றி பெற்றதும் அவர்கள் கட்சிக்கும் வெற்றியைக் கொண்டு வந்தனர். ஆனால், இந்தத் தலைவர் அப்படி இல்லை.

*கே:ஐக்கிய தேசிய கட்சியின் தோல்விக்கு ரணிலை மாத்திரம் காரணமாகக்கொள்ள முடியுமா?*

ப: இல்லை. தலைவர் என்ற அடிப்படையில் தோல்விக்கு அவர் பொறுப்புக்கூற வேண்டும். உதாரணத்துக்கு இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை எடுத்துக்கொள்ளலாம். பச்சை நிறத்தவர்கள் எமது கட்சியைப் பாதுகாப்பதற்கு ஒன்றிணையுங்கள் என்று அதிக பணம் செலவழித்து பிரசாரம் செய்யப்பட்டது.

ஆனால், எத்தனை உறுப்பினர்களை வெல்ல வைப்பது எத்தனை சபைகளை கைப்பற்றுவது என்று சரியான இலக்கு ஒன்று இருக்கவில்லை. சரியான கண்காணிப்பு–கணிப்பீடு இருக்கவில்லை. வெறுமனே பொதுவாக விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்தால் மட்டும் போதும், வாக்குக் கிடைக்கும் என்று நினைத்திருந்தனர். இப்படியான வீழ்ச்சி ஒன்று ஏற்படும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஹெலிகொப்டரில் சென்று பிரசாரம் நடத்திவிட்டு வந்தால் போதும் என்று தலைவர் நினைத்திருந்தார். ஆனால், கடைசியில் கட்சி தோல்வியடைந்தது. குறைத்து மதிப்பீடு செய்துவிட்டனர். சுதந்திரக் கட்சி இரண்டாக உடைந்துள்ளதால் எம்மால் இலகுவாக வெற்றி பெற முடியும் என்று அவர்கள் நினைத்தனர்.

ஐ.தே.க. தனது கட்சி ஆதரவாளர்களை பலப்படுத்துவதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியை வெற்றி பெறச் செய்வதற்காகப் பாடுபட்ட வாக்களிப்பு நிலையமட்ட தலைவர்களை கட்சி மறந்துவிட்டது. அத்தோடு அரசியல் பழிவாங்களுக்கு உள்ளான பல் பேரை கவனிக்கவில்லை. கட்சியின் தொழிற் சங்கங்கள் வீழ்ச்சியடைந்து விட்டன.

வியாபாரிகளுக்கு ஐக்கிய தேசிய கட்சி மீது விருப்பம். ஆனால், இந்த முறை அந்த வியாபாரிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். தேசியவாதம் இல்லாமல் போய்விட்டது.இவ்வாறான காரணங்கள் ஒன்று சேர்ந்துதான் இந்தத் தேர்தலில் கட்சியை தோல்வியடையச் செய்தன.

*கே: நீங்கள் கட்சியுடன் இருந்த காலத்தில் கட்சியிடம் அதிகமான பணம் இருந்ததா?*

ப: கட்சியின் உண்மையான நிலைமை என்னவென்று எனக்கு முழுமையாகத் தெரியும்.சிலரிடம் பணம் வாங்கித்தான் கட்சியில் உள்ளவர்களுக்கு சம்பளம் செலுத்தப்பட்டது. பலர் உதவினர். அது போதவில்லை. அந்த உதவியைக் கொண்டு கட்சியை நடத்த முடியவில்லை.

*கே: ரணிலுக்கு மகிந்தவுக்கு இடையிலான தொடர்பு என்ன? இந்தத் தொடர்பால் மகிந்த நன்மை அடைந்தாரா அல்லது ரணில் நன்மை அடைந்தாரா?*

ப: இருவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு என்று சமூகத்தில் பேசப்படுகின்றது. உண்மையில் அவர்களிடையே தொடர்பு உண்டா இல்லையா என்று தனிப்பட்டமுறையில் எனக்கு எதுவும் தெரியாது. அப்படி இருந்தால் ரணில் கட்சிக்கும் கட்சியின் ஆதரவாளர்களுக்கும் செய்யும் துரோகமாகும்.

*கே:அன்று பெரும் அபிவிருத்திகள் செய்து பாரிய மாற்றங்களை ஏற்படுத்திய ஐக்கிய தேசிய கட்சி இப்போது அப்படி செய்யாதது ஏன்?*

**(05ஆம் பக்கம் பார்க்க)**

எதிரொலி
Ethiroli
சனி 24 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# கடைசி அஸ்திரம்

அடுத்த பிரதமர் யார் என்ற கேள்வி இப்போது சுருதி குறைந்து, "அடுத்த சட்டம், ஒழுங்கு அமைச்சர் யார் ?' என்ற கேள்வியில் வந்து நிற்கிறது. இதுநாள்வரை அந்த அமைச்சுப் பதவியை வகித்து வந்த சாகல ரத்நாயக்க, பதவியில் இருந்து விலக முடிவெடுத்துள்ளார். கட்சிக்குள் இருந்து எழுந்த கடுமையான விமர்சனங்களும், அழுத்தங்களுமே அவரை இவ்வாறு சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியை உதறும் நிலைக்கு கொண்டுவந்துள்ளது.

நல்லாட்சி அரசு, ஆட்சிக்கு வரும் போதே ஏகப்பட்ட அதிரடி அறிவிப்புக்களையும், நூறுநாள் வேலைத்திட்டத்தையும் வெளியிட்டிருந்தது. அந்த அறிவிப்புகளும், நல்லாட்சி அரசின் 100 நாள் வேலைத் திட்டமும் சொன்னபடி நடந்திருந்தால், இப்போது இலங்கையில் குற்றம் புரிந்த அனைவரும் சிறைக் கூண்டுக்குள் தண்டனைக் கைதிகளாக இருந்திருப்பர். நாட்டில் அமைதியும், நல்லிணக்கமும் மலர்ந்து எங்கும் சமாதனப் புறாக்கள் வலம் வந்திருக்க வேண்டும். எல்லாப் பொருட்களினதும் விலைகள், முன்னர் இருந்ததைக் காட்டிலும் பல மடங்கு குறைந்திருக்க வேண்டும். ஊழல், மோசடிகள் இல்லாத நாடாக இலங்கை மிளிர்ந்திருக்க வேண்டும்.

நிறைவேற்றதிகாரம் ஒழிக்கப்பட்டு, உலகிலேயே மிகச் சிறந்த ஜனநாயக அரசை நிறுவும் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும். தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இவையெதுவுமே நடக்கவில்லை. மாறாக மத்திய வங்கியில் எஞ்சிக் கிடந்த மக்களின் சொத்துக்களை, பிணை முறி ஏலம் மூலம் கபளீகரம் செய்த வேலை மட்டும் கன கச்சிதமாக நடந்தது.

மக்களை நம்பவைக்க சில ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு, விசாரணைகள் நடத்தப்பட்டு, நாடறிந்த குற்றவாளிகள், சிறைக்குள் அடைக்கப்பட்ட வேகத்திலேயே பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள்தான் குற்றவாளிகள் என்பது நாட்டு மக்களுக்கே நன்கு தெரிந்திருந்த போதும், அவர்கள் ராஜ மரியாதையுடன் சிறைக்கு கொண்டு செல்லப்படுவதும், அடுத்த நொடியே பிணையில் வீட்டுக்கு அனுப்பப்படுவதும் தொடர்ந்தால் பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு சினம் வராமலிருக்குமா?

நல்லாட்சி அரசு எல்லாவற்றிலுமே அளவுக்கு அதிகமான நிதானத்தையும், அலட்சியத்தையும் காட்டியதால், உருப்படியான எதையும் சாதிக்கவில்லை. ஐ.தே.கவினதும் சுதந்திரக் கட்சியினதும் கொள்கைகள் அடிப்படையில் வேறு வேறானவை. இதுநாள்வரை கீரியும் பாம்புமாகத் திரிந்தவர்களை ஒன்றாகப் பிணைத்து விட்டால், முறைத்துக் கொண்டுதானே திரிவார்கள். எந்தவொரு திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அது இரு கட்சிக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கவேண்டும் என்பதற்காகச் செய்யப்படும் மாற்றங்களால் கடைசியில் அந்தத் திட்டங்களின் அடிப்படைப் பண்பே மாற்றமடைந்து , எதுவுமே இல்லாமல், உப்புச் சப்பற்றதாகவே அவை நடைமுறைக்கு வந்தன.

ஆரம்பத்தில் விலை குறைக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் மீண்டும் உச்சத்தைத் தொட்டன. அத்தோடு நாளும், பொழுதும் ஒவ்வொரு திணைக்கள ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கியதால் அதைச் சமாளிப்பதிலேயே நல்லாட்சி அரசுக்கு நாக்குத் தள்ளிவிட்டது.

இப்படியெல்லாம் அரசின் சொல்கேளாப் பிள்ளைகளாக வியாபாரிகளும், அரசியல்வாதிகளும், ஊழியர்களும் நடந்து கொண்டதாலேயே நல்லாட்சி அரசு பற்றிய நல்லபிப்பிராயம் மக்களிடையே தோன்றவில்லை. எனவே இனிமேலும் அகிம்சைவாதிகள் போல, எல்லாவற்றிலும் விட்டுப் பிடிக்காமல், நாணயக்கயிற்றை இறுக்கிப் பிடித்து அரசை நிமிர்த்த சட்டம், ஒழுங்கு அமைச்சராக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை, நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. மென்போக்கோடு எதையும் அணுகுவதை விடுத்து,'அடிஉதவுவதுபோலஅண்ணன்தம்பிஉதவமாட்டான்' என்னும் வன்போக்கோடு நடக்க நல்லாட்சி அரசு முடிவெடுத்துவிட்டது. பொன்சேகா அடிபட்ட பாம்பு. எப்போது மகிந்த குடும்பத்தின் மீது தன் வஞ்சத்தைத் தீர்ப்பதென தருணம் பார்த்திருந்தார். இப்போது அதற்கான காலம் வருகிறது போலும். பார்ப்போம், நல்லாட்சி அரசின் கடைசி அஸ்திரமாவது , சரியாக வேலை செய்கிறதா என்று.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பழைய முறையிலேயே மாகாணசபைத் தேர்தல்

## ஐ.தே.க. ஆராய்வு

கொழும்பு, பெப்.24

மாகாணசபைத் தேர்தல்களை விகிதாசார முறைப்படி நடத்தலாமா என்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. உள்ளூராட்சித் தேர்தல்களின் போது கடைப்பிடிக்கப்பட்டது போன்ற, கலப்பு முறையிலான தேர்தல் முறையை மாகாணசபைத் தேர்தல்களின் போதும் அறிமுகப்படுத்த கொள்கையளவில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

50 வீத உறுப்பினர்களை தொகுதி முறையிலும், 50 வீத உறுப்பினர்களை விகிதாசார முறையிலும் தெரிவு செய்யும் வகையில் புதிய கலப்பு தேர்தல் முறையை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக மாகாணசபைகளுக்கான தேர்தல் தொகுதிகளை வரையறை செய்வதற்கான குழுவொன்றும் அமைக்கப்பட்டு அதன் அறிக்கையும் பெறப்பட்டுள்ளது.

அதேவேளை, புதிதாக உள்ளூராட்சித் தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்ட கலப்பு தேர்தல் முறையினால், ஆளும் கட்சி தோல்வியைத் தழுவியுள்ள அதேவேளை இந்தத் தேர்தல் முறை குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஏற்கனவே நடைமுறையில் இருந்த விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைப்படியே தேர்தலை நடத்துவது குறித்து ஐ.தே.க ஆராய்ந்து வருவதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.(இ)



# அதிரடிப் படை சூடு

## பாதாளத் தலைவன் பலி!

வத்தளை, பெப்.24,

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவரும் போதைப் பொருள் வர்த்தகருமான தடல்லகே மஞ்சு துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார். வத்தளை, ஹேகித்த பிரதேசத்தில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் அவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர கூறினார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் வத்தளை, ஹேகித்த பிரதேசத்தில் சந்தேகத்திற்குரிய வாகனம் ஒன்றை நிறுத்தி சோதனை செய்ய முற்பட்ட போது அதில் இருந்து விசேட அதிரடிப்படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து நடத்தப்பட்ட பதில் தாக்குதலிலேயே பாதாள உலகக் கும்பலின் தலைவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் கூறியுள்ளது. மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

# நெல்லியடியில் நேற்று பொலிஸ் அணிவகுப்பு



வடமராட்சி, பெப்.24

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில், பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பியந்த தலைமையில் பொலிஸ்அணிவகுப்பும் பொலிஸ் வாகனப் பரிசோதனையும் நேற்று நடைபெற்றன. இந்த நிகழ்வினை, காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.பி பியந்த பார்வையிட்டார்.(அ)

# இந்திய மீனவர்கள் விரைவில் விடுதலை

கொழும்பு, பெப்.24,

இலங்கையில்தடுத்து வைக்கப்பட்டுள்ள 20 இந்திய மீனவர்களையும் விடுதலைச் செய்ய அமைச்சர் மஹிந்த அமரவீர அனுமதி வழங்கியுள்ளார் என கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

சட்ட நடவடிக்கைகள்நிறைவடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ள 20 மீனவர்களும் விடுதலை செய்யப்படுவர்.

எல்லை தாண்டி மீன்பிடித்தனர் குற்றச்சாட்டில் இந்தவருடத்தில்129 இந்திய மீனவர்கள் தைாகினர். இவர்களில் 109 பேர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். மீதமுள்ள 20 பேரும் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர். (இ)

# தொற்றுநோய்ச் சூழல்: வடமராட்சியில் ஆய்வு

வடமராட்சி, பெப்.24

வடமராட்சியில் உள்ள, ஜே/350 கிராமசேவையாளர் பிரிவில் உள்ள வீடுகளுக்குச் சென்று டெங்கு முதலான தொற்றுநோய்கள் உண்டாகக் கூடிய சூழமைவு தொடர்பில், கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்களும், இராணுவத்தினரும் பொலிஸாரும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கிராமசேவையாளர்களும், நேற்று வெள்ளிக்கிழமை பார்வையிட்டனர். (அ-11)

## முல்லைத்தீவு, கிளிநொச்சியில்

# இன்றும்; நாளையும் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,பெப்.24

போரினால் பாதிப்பிற்குள்ளாகியிருக்கும் முல்லைத்தீவு, கிளிநொச்சி வாழ் மக்களின் நலன் கருதி வட மாகாண மகளிர் விவகாரம், சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரனின் ஏற்பாட்டில் குறித்த மாவட்ட செயலகங்களுடன் இணைந்து சமூக சேவைகள் தொடர்பான மாபெரும் நடமாடும் சேவை நடைபெற உள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 9மணி முதல் மாலை 4மணி வரை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக வலுவூட்டல், நலனோம்பு மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவும், நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் பங்கேற்கவுள்ளனர்.

இந்த நடமாடும் சேவைகளின் போது கீழ்க்காணும் சேவைகள் வழங்கப்பட உள்ளன.

மூக்கு கண்ணாடி வழங்குதல், மாற்றுத்திறனாளிகளுக்கான சுயதொழில் உதவி, மாற்றுத்திறனாளிகளுக்கானவீடு திருத்தம், மாற்றுத்திறனாளிகளுக்கான மலசலகூட வசதிகளை வழங்கல், மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணம் வழங்கல், பூர்த்தி செய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மலசலகூடத்துக்கான காசோலை வழங்கல், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான சுயதொழில் உதவி, மாற்றுத்திறனாளியாக உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு கல்விக்கான உதவி, முதியோர் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல், நலிவுற்றோருக்கான தற்செயல் நிவாரணம் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு குறித்த மாவட்டங்களில் உள்ள, இத்தேவைகளை உடையோர் இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு தெரிவிக்கபட்டுள்ளது. (அ)

# இத்தாலித் தேர்தலில் இலங்கையர்

மிலான், பெப்.24,

இலங்கையைச் சேர்ந்த தமிழர் ஒருவர் இத்தாலி நாட்டின் தேர்தலில் போட்டியிடுகிறார். இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இத்தாலிக்குச் சென்று, மிலான் நகரில் வாழ்ந்து வரும் நிரஞ்சன் வாஸ் என்பவரே தேர்தலில் போட்டியிடுகிறார். எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அந்நாட்டின் பிரதான அரசியல் கட்சியான ஜனநாயகக் கட்சி வேட்பாளராக இவர் களமிறங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.(இ)

## இன்று நாளும் கோளும்

24.02.2018 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 12 ஆம் நாள்

நவமி பகல் 07.57 மணி வரை | ரோகினி பகல் 09.01 மணி வரை | அமிர்தசித்தயோகம்

இராகுகாலம் 09.00 - 10.30 | சுபநேரம் மு.ப. 07.30 - 08.30 | எமகண்டம் மு.ப. 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மகிழ்ச்சி | எதிர்ப்பு | வெற்றி | தடங்கல் | நட்பு | தோல்வி | இலாபம் | ஊக்கம் | அசதி | புகழ் | ஆக்கம் | புகழ் |

# 150 சபைகளில் ஐ.தே.க ஆட்சி

கொழும்பு, பெப்.24



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி 42 சபைகளைக் கைப்பற்றியுள்ளபோதிலும் ஏனைய கட்சிகளுடன் இணைந்து கூட்டாட்சி மூலம் 150 சபைகளைக் கைப்பற்றுவதற்கு வியூகம் வகுத்துள்ளதாக அந்தக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் அவரிடம் கருத்துக் கேட்டபோதே இவ்வாறு கூறினார்.

"புதிய தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் அதிகமான இடங்களில் தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலை உள்ளது. இதனால் கட்சிகள் ஒன்றிணைந்தே ஆட்சி அமைக்க வேண்டியுள்ளது.

இந்த அடிப்படையில் சுமார் 150 சபைகளில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த சபைகளில் கட்சிகளுடன் பேசி வருகின்றோம். நாம் ஆட்சி அமைக்கப் போகும் ஒவ்வொரு சபைக்கும் எத்தனை பெண்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற பட்டியலை தேர்தல் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக வெளியிட்டதும் நாம் ஆட்சியை அமைப்போம்.

இந்தத் தேர்தல் முறைமை சிக்கலானது. ஒன்றரை வருடங்களுக்கு முன் இந்தத் தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். சிலரின் தேவைக்காக இது ஒத்திப்போடப்பட்டுக் கொண்டு வந்தது. மேலும் ஒத்திப்போட முடியாது என்பதாலேயே இந்த முறைமைக்கு நாம் இணங்கினோம்.

இதனால் இப்போது பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. வென்ற கட்சிகள் ஆட்சி அமைக்க முடியாமல் தடுமாறுகின்றன. இருந்தும், நாம் முடியுமானவரை இந்தப் பிரச்சினையைத் தீர்ப்போம். ஏனைய கட்சிகளுடன் இணைந்து 150 சபைகளில் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புகள் எமக்கு இருக்கின்றன" என்றும் அவர் கூறினார். (அ)

## இறக்குமதி உருளைக்கிழங்குக்கு வரி அதிகரிப்பு

கொழும்பு, பெப்.24,

இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு ஒரு கிலோ கிராமுக்கு இதுவரையில் ஒரு ரூபாவாக இருந்த விசேட பண்ட வரி நள்ளிரவு முதல் 30 ரூபாவாக ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு உருளைக்கிழங்கு உற்பத்திகள் சந்தைக்கு வருவதால் உள்நாட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலேயே இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய வரித்திருத்தம் மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையில் அமுல்படுத்தப்பட உள்ளது. (இ)

## வெட்டுப்புள்ளியில் நீதியின்றேல் மாகாணசபையில் போராட்டம்

வவுனியா, பெப்.24

"வடக்கு மாகாணத்தில் நியமனங்களை வழங்கும் போது மாவட்ட ரீதியில் வெட்டுப் புள்ளிகள் இடப்பட்டு தெரிவு இடம்பெற வேண்டும். இதற்குத் தீர்வு கிடைக்காவிட்டால் மாகாண சபையில் போராட்டம் நடத்துவோம்" என வட்மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா தெரிவித்துள்ளார்.

வவுனியா விபுலானந்தா கல்லூரியில் நேற்று இடம்பெற்ற முன்னாள் அதிபருக்கான பிரியாவிடை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாடு பூராகவும் தேசிய கொள்கைத் திட்டத்தின் கீழ் அரச நியமனங்கள் தகுதிக்கேற்ப வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்கப்படும் போது வடமாகாணத்திற்குரிய நியமனங்கள் பொதுவான ஒரு வெட்டுப் புள்ளியின் கீழ் வழங்கப்படுகின்றன. அது தவறானது. யாழ். மாவட்டத்தை விட வடக்கின் ஏனைய மாவட்டங்கள் யுத்தத்தால் மிகவும் பாதிப்படைந்த பின்தங்கிய மாவட்டங்களாகும். அந்தந்த மாவட்டங்களுக்கு எனத் தனியான வெட்டுப் புள்ளிகளும், யாழ்ப்பாணத்துக்கு தனியான வெட்டுப் புள்ளிகளும் இடப்பட்டு நியமனம் வழங்கும் போதே யுத்தத்தால் பாதிப்படைந்த வன்னி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் நியமனங்களைப் பெற முடியும்.

வடக்கில் தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட வடமாகாண சபை நியமனங்களைக் கூட இவ்வாறு சீராக சமத்துவமாக மாவட்ட பங்கீட்டு அடிப்படையில் வழங்கமுடியாத நிலையில் எவ்வாறு சிங்கள பிரதிநிதிகள் அதிகமாக இருக்கும் நாடாளுமன்றத்தில் நீதியைப் பெற முடியும். வடமாகாண முதலமைச்சர் மற்றும் வடக்கு ஆளுநர் ஆகியோர் இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல் வடக்கின் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் மாகாணசபையில் போராட்டத்தை நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்" எனவும் தெரிவித்தார். (அ)

## பிரியங்க நாடு திரும்ப புலம்பெயர் தமிழர்களின் அழுத்தமே காரணம்



கொழும்பு, பெப்.24

பிரிட்டனில் இலங்கை த் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகச் செயற்பட்ட பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ நாடு திரும்புவதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களால் கொடுக்கப்பட்ட அழுத்தமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 37 ஆவது கூட்டத்தொடர் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், தமிழர் ஒருங்கிணைப்பு குழு உள்ளிட்ட 10 க்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் கடுமையான அழுத்தம் கொடுத்து வந்ததுடன், குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக பிரிட்டனில் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

இந்த நிலையிலேயே, அழுத்தங்களில் இருந்து விடுபட இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு அமைய பிரிகேடியர் பிரியங்க நாடு திரும்பியுள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினத்தன்று பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களின் கழுத்தை அறுத்து விடுவேன் என சமிக்ஞை காட்டியமையினால் பெரும் சர்ச்சைகளுக்கு அவர் முகம் கொடுக்க நேரிட்டது.

அன்றைய தினமே அவரது சேவை உடனடியாக இடைநீக்கம் செய்யப்பட்ட போதிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதனை தடுத்திருத்தார்.

குறித்த இராணுவ அதிகாரி மரண அச்சுறுத்தல் விடுத்தார் என பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோன் ரயன், சிமோன் மெக்டெனோ மற்றும் போல் ஸ்கலி ஆகியோர் குற்றம் சுமத்தி இருந்தனர்.

எனினும் குறித்த இராணுவ அதிகாரி தவறு ஒன்றையும் செய்யவில்லை என இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்கவினால் குறிப்பிடப்பட்டது.

கடந்த வாரம் மீண்டும் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பிரிட்டன் பொதுநலவாய சபை அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வாறு புலம்பெயர் தமிழர்கள் தொடர்ச்சியாக வெளிப்படுத்திய எதிர்ப்பின் காரணமாகவே பிரிகேடியர் பிரியங்க இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளார். (அ)

## உதயதுங்கவுக்கு இன்ரர்போல் குறி

கொழும்பு, பெப்.24

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக இன்ரர்போல் பொலிஸின் 'சிவப்பு ஆணை ' பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிகாரிகளின் கோரிக்கைகளை அடுத்து, இன்ரர்போலால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

மிக் போர் விமானக் கொள்வனவில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில், உதயங்க வீரதுங்கவுக்கு அழைப்பாணை விடுத்திருந்தும், அவர் விசாரணைகளுக்கு முன்னிலையாகாத நிலையில் நீதிமன்றத்தின் ஊடாக இந்த சர்வதேசப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

## மகிந்தவைப் பிரதமராக்க போராட்டம் ஆரம்பம்



கொழும்பு, பெப்.24

எதிர்கட்சித் தலைவர் பதவியை விரைவில் மகிந்த ராஜபக்சவுக்கு பெற்றுக்கொடுத்து அதனூடாக நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பதற்கான போராட்டம் தொடக்கி வைக்கப்பட்டுள்ளதாக மகிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமகே தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நாட்டில் ஆட்சி பலமற்றதாகிவிட்டது. இந்தத் தேசிய அரசுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டியுள்ளனர். ஆட்சியைக் கலைத்துவிட்டு நாடாளுமன்றத் தேர்தலை உடன் நடத்துவதற்கான ஆணையை மக்கள் இந்தத் தேர்தலின் ஊடாக வழங்கியுள்ளனர். மக்களின் அந்தத் தீர்ப்பின்படி அரசு செயற்பட வேண்டும்.

தேசிய அரசுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இருந்தாலும் ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தேசிய அரசையே நடத்திச் செல்வர். அதைக் கலைக்கமாட்டார்கள். எது எப்படியோ இன்னும் ஒன்றரை வருடங்களில் தேர்தல் வந்துவிடும். அதுவரைதான் இவர்களின் ஆட்டம்.

நாம் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மகிந்த ராஜபக்சவுக்கு பெற்றுக்கொடுக்கும் போராட்டத்தைத் தொடங்கியுள்ளோம். எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வைத்துக் கொண்டுதான் நாம் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்போம்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## பளை மத்திய கல்லூரியின் விளையாட்டுப் போட்டி







பளை,பெப்.24

பளை மத்திய கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெயராணி பரமோதயன் ஆகியோர் கலந்துகொண்டு, வெற்றி பெற்ற வீரர்களுக்கான சான்றிதழையும், கேடயங்களையும் வழங்கினர். (அ-11)

# பசிலுக்கு எதிரான வழக்கு ஜூனில்



கொழும்பு, பெப். 24,

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை, எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர். ஹெயியன்துடுவ உத்தரவிட்டுள்ளார்.

வழக்கின் சாட்சியாளர்களை, அன்றைய தினம் நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, 365 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஜீ.ஐ.சி குழாய் விநியோகத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பிலேயே, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட இருவருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## இறக்குமதியாகும் உருளைக் கிழங்குக்கு வரி அதிகரிப்பு

கொழும்பு, பெப்.24,

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோ கிராமிற்கு இதுவரையில் ஒரு ரூபாவாக இருந்த விசேட பண்ட வரி நள்ளிரவு முதல் 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு உருளைக்கிழங்கு உற்பத்திகள் சந்தைக்கு வருவதால் உள்நாட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலேயே இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கிற்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய வரித்திருத்தம் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட உள்ளது. (இ)

# "எந்தக் கட்சியாலும் தனியரசு அமைக்க முடியாது"

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

ப: இப்போது ரணிலிடம் பெரும் மாற்றம் தென்படுகிறது. 2001 இல் பாரிய வேலைத் திட்டத்தை முன்வைத்தார். அதற்குள் 60 திட்டங்கள் அடங்கி இருந்தன. அதற்கு நிதி தேடி வெளிநாடுகளுக்குச் சென்றார். ஜப்பான் 45 ஆயிரம் கோடி ரூபாவை வழங்குவதற்கு அனுமதி வழங்கியது.

இப்படி பாரிய திட்டங்களை வகுத்துச் செயற்பட்ட ரணில் 2015 இல் பிரதமரானதும் மாறிவிட்டார். அப்போது அவர் காட்டிய அக்கறையை இப்போது காட்டவில்லை. அமைச்சர்கள் புதிய வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதியைக் கோரினார்.

நாடு கடன் சுமையில் இருக்கின்றது என்றால் ஏன் இதையெல்லாம் செய்ய வேண்டும். ரணிலின் இந்தச் செயல் அதிசயமாக உள்ளது. எப்படி மாறினார் என்று தெரிய வில்லை.

*கே: ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூடி, ரணிலை தலைவர் பதவியில் இருந்து நீக்க முடியாதா?*

ப: ஒவ்வொரு ஆறு வருடங்களுக்கு பின் அல்லது தேசிய தேர்தல் ஒன்றுக்குப் பின் தலைவர் மீள தெரிவு செய்யப்பட வேண்டும் என்று கட்சியின் யாப்பு கூறுகின்றது.

*கே: மீண்டும் மகிந்த ஆட்சிக்கு வருவாரா?*

ப: மகிந்தவைப் பொறுத்தவரை அவர் மக்களிடம் நெருக்கமான தலைவர். அவர் தோல்வியடைந்து தங்காலை வீட்டுக்குச் சென்று இருந்தபோது மாதக் கணக்கில் மக்கள் அவர்ரைப் பார்க்கச் சென்றனர்.அவரின் தோல்வியை நினைத்து அழுதார்கள். அங்கிருந்தே மீண்டும் பயணத்தை ஆரம்பித்தார்.

சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் ஒன்றிணைந்து ஆட்சி அமைத்ததும் எதிர்க்கட்சித் தலைவர் வெற்றிடம் உண்மையில் மகிந்தவிடமே சென்றது. அவர் தினமும் விகாரைகளுக்கும் மரண வீடுகளுக்கும் சென்று தனது பலத்தை அதிகரித்துக்கொண்டார்.

*கே: மகிந்த இந்த நிலைக்கு வருவதற்கு ஐக்கிய தேசிய கட்சியே காரணம் என்று குற்றச்சாட்டு உண்டு அல்லவா?*

ப: இந்த அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே என்னைப் பிடித்து சிறையில் அடைத்தனர். நான் ஊழல் புரியவில்லை. அரசியல் காரணத்துக்காகவே இவ்வாறு செய்தனர்.ஆனால், மகிந்த தரப்பில் யாரையும் அவ்வாறு பிடிக்க வில்லை. இந்த அடிப்படையில் ஐக்கிய தேசிய கட்சி மகிந்தவுக்கு உதவியது என்றே சொல்ல வேண்டும்.

மகிந்தவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசு எதுவித நடவடிக்கையையும் எடுக்காததால் மகிந்த குற்றமற்றவர் என முடிவு செய்து மக்கள் அவரை இந்தத் தேர்தலில் ஆதரித்துள்ளனர்.

*கே:ஐக்கிய தேசிய கட்சியில் அடுத்த தலைவர் பதவிக்குப் பொருத்தமானவர் யார்?*

ப: சஜித் பிரேமதாஸதான் பொருத்தமானவர். அவருக்கு அந்தப் பதவி கொடுக்கப்பட வேண்டும். அவர் பிரதித் தலைவர். அவர் இப்போதே 2020 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாராக வேண்டும். அவர் சிறந்த தலைமைத்துவப் பண்பை உடையவர்.

*கே:இப்போதைய அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு ஐக்கிய தேசிய கட்சி தனி அரசை அமைப்பதா அல்லது மைத்திரி அரசு அமைவதற்கு உதவுவதா?*

ப:இப்போது யார் ஆட்சி அமைத்தாலும் அது ஸ்திரமற்ற அரசாகவே அமையும்.மக்கள் மீண்டும் ஆணை வழங்குவதற்கு இடங்கொடுக்க வேண்டும். தேசிய அரசு என்ற சொல் அழகாக இருக்கின்றபோதிலும் பயன் ஏதும் இல்லை. கொள்கை தோல்வியடைந்துவிட்டது.


அமைச்சரவையில் ஒன்றாகப் பேசிவிட்டு வெளியே வந்து இரு வெவ்வேறு கருத்துக்களை கூறுகின்றனர். அங்கு ஒற்றுமை,கூட்டுப் பொறுப்பு போன்ற எதுவும் இல்லை. தனி அரசுதான் உருவாக வேண்டும்.இனி யாராவது தேசிய அரசு உருவாக்கப் போவதாகக் கூறினால் மக்கள் அவர்களுக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

இப்போதைய நிலையில் தனி அரசை எந்தக் கட்சி உருவாக்கினாலும் அது சரிப்பட்டு வராது.அந்த அரசால் மக்களின் தேவையை நிறைவேற்ற முடியாது.மீண்டும் தேர்தலுக்குச் சென்று அதன் பின் அரசை உருவாக்குவதுதான் சிறந்தது.

*கே: உங்களின் அரசியல் இலக்கு என்ன?*

ப:கடந்த மூன்று வருடங்களாக அரசியலில் நான் சுயாதீன நிலைப்பாட்டையே கொண்டிருந்தேன். ஆனால், ஐக்கிய தேசிய கட்சிமீது நான் கொண்டிருக்கும் பிணைப்பு-பாசம் அப்படியே உண்டு.ஆனால், அந்தக் கட்சியில் நான் உடன்படாத அதிக விடயங்கள் இடம்பெற்றுள்ளன.அதற்கு நான் உடன்படமாட்டேன்.

எதிர்காலத்தில் நான் ஐக்கிய தேசிய கட்சி அரசு உருவாக வேண்டும் என்றே விரும்புகிறேன். இதற்காக நானும் எதிர்காலத்தில் அரசியலில் இறங்க வேண்டி வரும். அதற்காக தகுதிவாய்ந்த தலைவர் வந்தால் மாத்திரமே அது சாத்தியப்படும்.



## எது நடந்தாலும் உடனை முத்திரை குத்த ஒரு "புலி" சீல் இருக்கெல்லே?

களவெடுத்துக் கொண்டு போகேக்கை ஒருதர் கையும் மெய்யுமாய் மாட்டுப்பட்டுக் கொண்டிட்டாரெல்லே! முதலி தான் கான்போனிலை காட்டினவன். அப்பிடியே கோடாலியாலை கொத்திப் பிழந்த மாதிரி பஸ் எரிஞ்சுபோய்க் கிடக்கு. பஸ் தியத்தலாவ எண்ட இடத்துக்குக் கிட்டவாப் போகேக்கை அந்தக் குண்டு வெடிச்சுப் போச்சுது. அந்த பஸ் யாழ்ப்பாணத்திலை இருந்து போனதாலை அந்த வெடிச்ச குண்டை "ஆமியை வெருட்ட ஆரோ வைச்சிட்டினம்" எண்டு ஒரு வெருளி அங்கையிருந்து கத்திது. அப்பிடிக் கத்திற வெருளி சொல்லுது தான் ஒரு அரசியல்வாதி எண்டு. தான் அரசியல்வாதி எண்டு சொல்லுற அது, அங்கை வெடிச்ச குண்டு என்ன குண்டு? ஏன் வெடிச்சது? எப்பிடி வெடிச்சது? எண்ட விவரந்தெரியாத ஒரு வெங்காயம். இல்லாட்டித் தெரியாத மாதிரி நடிப்போ?

எல்லாம் தங்களை அரசியல்வாதியெண்டு சொன்னால்? உதாலைதானே உலகத்துக்குக் கேடு. அரசியல் என்ன எண்டு தெரியாத நாதாரியள் எல்லாம் அரசியல் பேச வெளிக்கிட்டதாலைதான் உந்த வினை. ஒண்டிலையும் ஒழுங்கில்லை. ஒண்டுலையும் மீட்சி இல்லை. பெரும்பான்மை இல்லாமல் தொங்கிக் கொண்டு இருக்கிறம். எப்ப வெட்டி விழுத்துவினமோ தெரியாது? வீழுந்து சிதறேக்கை தான் தெரியும் எந்த எலும்பு முறிஞ்சுபோச்செண்டு.

அந்த அரசியல்வாதி சொன்னதுக்கு உடனை ஆமியிலை உள்ள ஒராள் சொல்லி இருக்கிறார், "அது ஆமி கொண்டு வந்த கைக்குண்டாலை தான் உந்தப் பிசகு நடந்திருக்குப்போலை. அது தான் என்ரை சந்தேகமும். இப்ப விசாரணையை முடிக்கி விட்டிருக்கிறம். உண்மை யைக் கண்டு பிடிச்சுக் கெதியாச் சொல்லுறம்," எண்டு. அது மனுசத் தன்மை. தொட்டதுக்கும் இது சதி முயற்சி. மீண்டும் பயங்கரவாதம் தலையை மெல்லத் தூக்கிது. எட்டிப் பாக்கிது. இந்தா துவக்கைத் தூக்கிது. சுடப்போகிது" எண்டு சொல்லித் தன்னையும் குழப்பி.. சனத்தையம் குழப்பி, நிண்ட கண்டவையளையும் குழப்பிக் கதைக்கிற ஆக்களின்ரை பின்பக்கத்தைப் பாத்தால் அதிலை ஏதோ சுயநலம் இருக்கும் எண்டு தெரியம்.

உந்தக் குண்டு வெடிப்புக்குப் புலி முத்திரை குத்தப் பாத்தவர் ஆர் தெரியுமே? மாண்புமிகு மகிந்த பாட்டியிலை உள்ள ஒரு அமைச்சர் பெருமான். அவைக்கு இப்ப எதையாவது சொல்லி நாட்டைக் குழப்பிறது ஒரு தேவையாக் கிடக்கு. அதுக்கான சந்தர்பத்தைப் பாத்துக் கொண்டு இருக்கிறவைக்கு "வெறுவாய்க்குச் சப்பச் சக்கரை குடுத்த மாதிரி" உது அம்பிட்டுப் போச்சுது. அதுவும் குண்டு வெடிப்பு. அதுவும் பொது சனம் போன பஸ்ஸூக்கை. அதுவும் ஆமிபோன பஸ்ஸூக்கை. அதுவும் யாழ்ப்பாணத்திலை இருந்து போன பஸ்ஸூக்கை. அப்ப புலிக் கதையைச் சோடிக்க வலு சுகமோ? இல்லையோ?

பொது சனம் தாங்கள் பாத்ததை வடிவாச் சொல்லிப் போட்டுதுகள். ஆமி பொக்கற்றுக் குள்ளாலை குண்டை எடுத்து அவற்றை பாக்கிக்கை ஒழிச்சு வைக்கேக்கைதான் கிளிப்புக் கழண்டு வெடிச்சதெண்டு. அதைத்தான் ஆமிக் காரரும் பேப்பர்காரருக்கும் சொன்னவர். அப்ப ஒரு பிரச்சினையை வடிவா ஆராயாமல் கதைக்கப் பிடாது.

ஆனால் இப்ப பாக்கேக்கை கதிரையைப் பிடிக்க என்னத்தையும் வாய் கூசாமல் சொல்லலாம் எண்ட நியதி வந்திட்டுதெல்லோ? அப்ப நாங்கள் நியாயம் நேர்மை, நீதி நாட்டிலை இருக்கு மெண்டு பாக்கப்பிடாது. கண்ணை மூடிக்கொண்டு சீவிக்கப் பழக வேணும். காலையிலை எழும்பினமாம், கால் முகம் கழுவினமாம், கக்கூசுக்குப் போனமாம், குளிச்சமாம், பிறகு சாப்பிட்டமாம் எங்கடை வேலை வெட்டி என்னெண்டு பாத்திட்டு மத்தியானம், இரவுச் சாப்பாடு எண்டு என்னத்தை எண்டாலும் அள்ளி வயித்துக்கை எறிஞ்சு போட்டுப் படுத்திட வேணும். திரும்பவும் மற்ற நாளும் அதைத்தான் செய்ய வேணும்... அப்பிடி கண்ணை மூடிக் கொண்டு சீவிச்சால் சுகமா வாழலாம் எண்டு முதலி பெருமான் சொல்லிறார்.

- வில்லங்கம் விநாசி

# கல்வித்துறை இடமாற்றத்தில் குளறுபடி: ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் சாடல்

யாழ்ப்பாணம், பெப்.23,

வட மாகாண கல்வி அமைச்சு சரியான இடமாற்றக் கொள்கையைக் கடைப்பிடிக்கவில்லை எனக் கல்விச் சமூகம் கவலை வெளியிட்டுள்ளது. ஆசிரியர்கள் ஒப்பந்த காலம் - திகதி - குறிப்பிடப்பட்டு, வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களின் சேவை நிறைவடைந்த பின்னரும்கூட மீளத் திரும்ப முடியாத நிலை காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வலயங்களில் இருந்து பதிலீட்டு ஆசிரியர்கள் விடுவிக்கப்படாததாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகவும் ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். வெளி மாவட்ட சேவை செய்யாத ஆசிரியர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் உள்ள போதும் அதிகாரிகளின் தயவுடன் இடமாற்றம் வழங்கப்படாமல் தொடர்ந்தும் பணி புரிவதாகவும் அவர்கள் சாடியுள்ளனர்.

இதேவேளை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர் நியமனம், இடமாற்றத்திலும் இத்தகைய குளறுபடிகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. வெளி மாவட்டங்களில் தூர வலயங்களுக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் 5 வருடங்களைப் பூர்த்தி செய்து இடமாற்றத்துக்கு விண்ணப்பித்தும் உரிய இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை. ஆனால், குறைந்த கால சேவையுடையவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை புதிதாக நியமனம் பெற்ற கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களைப் பணிநிலைப்படுத்தியதில் முறைகேடு இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்து அவர்கள் வட மாகாண முதலமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது. அது முதலமைச்சரின் பரிசீலனையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## மாணவியைத் தாக்கிய ஆசிரியர் கைது

கண்டி, பெப்.24

மாணவியைத் தாக்கிய ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நுகவெல பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் விளையாட்டு பாட ஆசிரியர் ஒருவரே நேற்றுக் கைது செய்யப்பட்டார். கூடைப்பந்து விளையாட்டு பயிற்சியில் பங்குபற்றவில்லை எனத் தெரிவித்து குறித்த பாடசாலை மாணவியைத் தாக்கிய குற்றச்சாட்டின் பெயரிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட மாணவி கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். ஆசிரியரைக் கைது செய்த புசல்லாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## திருநாவுக்கரசுவின் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 24

பிரபல அரசியல் ஆய்வாளர் மு.திருநாவுக்கரசு எழுதிய 'பூகோளவாதம் புதிய தேசியவாதம் நூலின் வெளியீட்டு விழா இன்று மாலை 3 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், தமிழக எழுத்தாளர் பா.செயப்பிரகாசம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

நூலின் முதற்பிரதியை வணபிதா ஈ.ஜெயசீலனிடமிருந்து குழந்தை ம.சண்முகலிங்கம் பெற்றுக் கொள்வார். வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் க.அருந்தாகரன், ஆய்வுரைகளை யாழ்.பல்கலைக்கழக அரசறிவியற் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி. கணேசலிங்கம், யாழ்.பல்கலைக்கழக அரசறிவியற் துறை முதுநிலைவிரிவுரையார் கலாநிதி ரி.கிருஷ்ண மோகன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கே.குருபரன் ஆகியோர் ஆற்றுவர். (இ)

## இன்றைய கேலிச்சித்திரம்




## அமைச்சரவையில் மாற்றம் நாளை?

கொழும்பு, பெப். 24

அமைச்சரவை மாற்றம் நாளை இடம்பெறும் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசிய கட்சி சார்ந்த அமைச்சுக்கள் பலவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிய வந்துள்ளது.

அமைச்சர் கபீர் ஹாசிமின் அரச தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சுப் பதவி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவிற்கும், அவரது உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அமைச்சர் கபீர் ஹாசிமுக்கு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நிதியமைச்சில் எவ்வித மாற்றங்களும் இடம்பெறாது. சரத் பொன்சேகாவுக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு வழங்கப்படவுள்ளது.

எவ்வாறாயினும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அமைச்சுக்களில் இதுவரை மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்றும் ஜனாதிபதியினால் இந்த அமைச்சரவை மாற்றங்கள் செய்யப்படும் என்றும் அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

## டக்ளஸ்க்கு அமைச்சு: நாம் ஆப்பு வைக்கோம்

### மாவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.24

மைத்திரி - ரணில் கூட்டு அரசில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவிகொடுப்பதை நாங்கள் தடுக்கவில்லை. அவருக்கு அமைச்சுப் பதவிதேவை என்றால் அல்லது அரசாங்கம் அமைச்சுப் பதவியை அவருக்கு கொடுக்க விரும்பினால் கொடுக்கவோ பெற்றுக்கொள்ளவோமுடியும். அமைச்சராக இருந்து அவர் செய்யாததை நாங்கள் வெளியில் இருந்து செய்துள்ளோம். அவரது அமைச்சுப் பதவிகளைக் கண்டு நாங்கள் அச்சம் கொள்ளவில்லை என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மத்திய அரசில் அமைச்சுப் பதவி பெறுவதற்கு கூட்டமைப்பே தடையாக இருந்ததாக கூறப்படுகின்ற நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் கூட்டமைப்பு ஆட்சியமைக்கும் சபைகளில் கூட்டமைப்பிற்கு டக்ளஸ் ஆதரவை வழங்கினால் மத்தியில் அமைச்சுப் பதவியை பெற்றுக் கொள்வதற்கு கூட்டமைப்பும் இணக்கம் தெரிவிக்குமெனவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து மாவை. சேனாதிராசாவிடம் கேள்வியெழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இனப்பிரச்சனைக்கான தீர்வு ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவந்தால் அதற்கு 3 இல் 2 பெரும்பான்மை வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செயற்படுகின்றோம். அவ்வாறான தீர்வைப் பற்றித் தான் யோசிக்கிறோமே தவிர நாங்கள் அமைச்சுப் பதவிகளை பெற போட்டியிடவில்லை. நாம் வேண்டுமானால் கிட்டத்தட்ட நான்கு அமைச்சுக்கள் மற்றும் பிரதி அமைச்சுக்கள் பெற்றிருக்கலாம் ஆனால் நாம் அதற்காக போட்டியிடவில்லை. அந்த நிலைப்பாட்டிலும் நாங்கள் இல்லை" "என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## மழை பெய்யும்!

கொழும்பு, பெப்.24,

இலங்கையில்தற்போது நிலவும்வறட்சியான காலநிலையில் திடீர் மாற்றம் ஒன்றை எதிர்பார்ப்பதாகவும் நாளை முதல் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய கிழக்கு மற்றும் ஊவா மாகாணத்திலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழை பெய்யும் என தெரிவிக்கப்படுகின்றது. காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டத்திலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் ஏனைய பகுதிகளில் காலை மற்றும் இரவு நேரத்தில் தொடர்ந்து குளிரான காலநிலை நிலவும் எனவும், மலையகப் பகுதிகளில் பனிமூட்டத்துடனான காலநிலை நிலவும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (இ)

## பஸ்ஸில் குண்டுவெடிப்பு விசாரணை செய்யக் குழு

கொழும்பு, பெப். 24

தியத்தலாவ பஸ்ஸில் கைக்குண்டு வெடித்தது தொடர்பில் விசாரிக்க இராணுவத் தளபதியின் உத்தரவின் பேரில் ஐவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. மேஜர் ஜெனரல் ருக்மல் டயஸ் தலைமையிலேயே இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு இராணுவத்தளபதி, குறித்த குழுவினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர், பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

பஸ்ஸில் பயணித்த இராணுவ சிப்பாய் ஒருவரிடமிருந்த கைக்குண்டே வெடித்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தச் சிப்பாய் காயமடைந்து தியத்தலாவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

## தொடர்ச்சிகள்

**விசாரிக்காதீர்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் அரசுக்கு ஆயிரத்து 140 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டதாகக் கூறி இலஞ்ச ஊழல் ஆணைக்குழு கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தது. அதற்கு எதிராகவே இந்த மறுபரிசீலனை மனுவை அவர் தாக்கல் செய்துள்ளார். (இ)

**பிரதமர்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்கள் வழங்கிய ஆலோசனைகளின்படியே அவர் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளார்.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் பிரதமரைப் பதவி நீக்கம் செய்வது தொடர்பில் பல கருத்துக்கள் நிலவி வருகின்றன. இதன் 46 ஆவது பிரிவிலுள்ள விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் ஆலோசகர்கள் கூடிய அவதானத்தை செலுத்தினர்.

இதன்படி பல தரப்பிலிருந்தும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இதனால் உயர் நீதிமன்றத்தின் கருத்தைப் பெறும் முயற்சியைக் கைவிடுமாறு ஜனாதிபதியின் ஆலோசகர்கள் அவருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இதனாலேயே கருத்துக் கேட்கும் முடிவு கைவிடப்பட்டது. (இ)

**களைத்து...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு அரசியலமைப்பு இடமளித்திருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தல்களில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விபரங்களை அரசிதழில் வெளியிட்ட பின்னர், இதுபற்றி நான் யோசிக்கவுள்ளேன். வேறு காரணங்கள் எதுவுமில்லை. நான் மிகவும் களைத்துப் போய் விட்டேன்" என்றும் அவர் கூறினார். (இ)

**ஐ.தே.கவினர்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் புதிய தலைமைத்துவ தலைமுறை உருவாக்கப்படவுள்ளது. உருவாக்கப்படும் தலைமைத்துவ தலைமுறையினரிடம் கருத்துக்களை பெற்று மக்கள் வழங்கியுள்ள ஆணைக்குள் தேவையான திருத்தங்கள், முன்னெடுக்கப்பட வேண்டிய வேகம், புதிதாக செயற்படுத்தப்பட உள்ள விடயங்கள் குறித்து கலந்துரையாடத் தாம் எண்ணியுள்ளார் எனப் பிரதமர் இதன்போது குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில், சஜித் பிரேமதாஸ, அகில விராஜ் காரியவசம், நவீன் திஸநாயக்க, சாகல ரத்நாயக்க, ஹர்ச டி சில்வா, ஹரின் பெர்னாண்டோ உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர். (இ)

**சிங்களவருக்கே...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதும் அவர்களைப் படகில் ஏற்றிச் செல்லவில்லை. இதனால் காத்திருந்தவர்களில் ஒரு தொகையினர் வீடு திரும்பினர். தொடர்ந்து அங்கு நின்றவர்களை பிற்பகல் 3.15 மணியளவில் கடற்படையினர் காங்கேசன்துறைக்கு அழைத்துச் சென்றனர். அவ்ர்கள்இன்று காலை கப்பல் மூலம் கச்சதீவு அழைத்துச் செல்லப்படுவர் எனக் கூறப்பட்டது. (ச)



# சிரியா போர் நிறுத்தம்: ரஷ்யா முட்டுக்கட்டை

டமாஸ்கஸ், பெப். 24

சிரியாப் போர் நிறுத்த தீர்மானத்துக்கு ஐ.நா.வில் ரஷ்யா முட்டுக்கட்டை போட்டுள்ளது.

சிரியா உள்நாட்டுப் போரில் கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள கவுட்டா நகரை மீட்பதற்காக, ரஷ்யப் படைகளின் ஆதரவுடன் அதிபர் ஆதரவுப் படைகள் மூர்க்கமாக சண்டையிட்டு வருகின்றன. கிழக்கு கவுட்டாப் பகுதியில் கடந்த 18ஆம் திகதி இரவு முதல் அந்தப் படைகள் தீவிர வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டுவந்தன. 5 நாட்களாக நடந்த தாக்குதலில் 403 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலியானவர்களில் 95க்கும் மேற்பட்டோர் சின்னஞ்சிறு குழந்தைகள் ஆவர்.


இப்படி அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டாலும், பயங்கரவாதிகளிடமிருந்து கவுட்டா நகரை விடுவிப்பதற்குத்தான் தாக்குதல் நடைபெறுவதாக சிரிய அரசு கூறுகிறது. ஆனால் கிழக்கு கவுட்டாவில் நடந்து உள்ள தாக்குதல் பயங்கரமான தாக்குதல் என்று ஐ.நா. சபை கூறுகிறது. நிவாரணப் பொருட்கள் சென்று அடைவதற்கு வசதியாகச் சண்டை நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று ஐ.நா. சபை வலியுறுத்தியுள்ளது.

ஆனால் சிரியாவில் 30 நாட்கள் போர் நிறுத்தம் கொண்டுவரவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீது உடன்பாடு ஏற்படவில்லை என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடந்த இந்தக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட போர் நிறுத்தத்துக்கான தீர்மானத்தில் தங்கள் நாடு திருத்தம் கோரியுள்ளதாக ஐ.நா.வுக்கான ரஷ்ய தூதர் வாசிலி நெபன்சியா தெரிவித்துள்ளார். பாதுகாப்புக் குழுவின் அவசரக் கூட்டத்தில் பேசிய அவர் "ஜனரஞ்சக மான" நடவடிக்கைகளைவிட "சாத்திய மான" நடவடிக்கைகளே தேவை என்று கூறினார்.

குவைத்தும், சுவீடனும் முன்மொழிந்த இத் தீர்மானத்தின்படி 30 நாட்களுக்குப் போர் நிறுத்தம் அமுலில் இருக்கும். தீர்மானம் நிறைவேறிய 72 மணி நேரம் கழித்து தீர்மானம் அமுலுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மற்றவர்கள் சத்தம் போட்டால் போடட்டும்



சென்னை, பெப். 24

"மற்றவர்கள் சத்தம் போட்டால் போடட்டும் நாம் நமது வேலையை அமைதியாகப் பார்ப்போம்" என ரசிகர் மன்ற நிர்வாகிகளிடையே ரஜினிகாந்த் பேசினார்.

ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நேற்று நெல்லை மாவட்ட ரசிகர்களைச் சந்தித்தார் ரஜினி. முந்தைய கூட்டங்களில் ரஜினியின் காணொளிக் காட்சி ஒளிபரப்பப்பட்ட நிலையில் முதல் முறையாக ரஜினிகாந்த் நேரில் கலந்துரையாடினார்.

ரஜினிகாந்த் அவர்களிடையே பேசும் போது,

'காலா' திரைப்படம் நெல்லை மாவட்டக் கதைதான். நீங்கள் மற்றவர்களுக்கு அரசியலை கற்றுக்கொடுப்பவர்கள். ஒரு குடும்பம் நடத்த வேணும் என்றால் குடும்பத்தலைவன் சரியாக இருக்க வேணும். இந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரை நான் சரியாக இருக்கிறேன். மற்றவர்கள் சத்தம் போட்டால் போடட்டும் நாம் நமது வேலையை அமைதியாகப் பார்ப்போம். ரசிகர்கள் எல்லோரையும் ஒரே நேரத்தில் சந்திக்க சில நாட்கள் ஆகும்.

அரசியலில் கட்டமைப்புதான் முக்கியம். அடித்தளத்தை வலிமையுடன் அமைக்க வேண்டும் எனபதால்தான் நாம் இவ்வாறு செயற்படுகிறோம். இது சாதாரண கட்டடம் கிடையாது. 32 மாடி. 32 மாவட்டம், அதனால் அடித்தளத்தை வலுமையாகப் போடவேணும். அரசியலில் எந்த விஷயத்தையும் கவனமாகக் கையாள வேண்டும் எனக் கூறினார். (ஐ)

## விஸ்வாசத்தில் யோகி



சென்னை, பெப். 24

அஜித் - சிவா 4ஆவது முறையாக இணையும் 'விஸ்வாசம்' படத்தில் புதிதாக யோகி பாபு இணைந்துள்ளார்.

'விஸ்வாசம்' படத்தின் படப்பிடிப்பு எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

வடசென்னை பின்னணியில் உருவாகும் இந்த படத்தில் அஜித் ஜோடியாக நயன்தாரா ஒப்பந்தமாகி இருக்கும் நிலையில், நகைச்சுவை நடிகர் யோகி பாபு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க விருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

அதேவேளை, முருகதாஸ் - விஜய் கூட்டணியில் தயாராகும் படத்திலும் இவர் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 'உம்மா' கொடுத்தவர் சி.சி.டிவியால் மாட்டினார்

மும்பை, பெப். 24

மும்பை துர்பே ரயில் நிலையத்தில் பெண் ஒருவரை பலவந்தமாக ஒருவர் முத்தமிட்டு உள்ளார். இது குறித்த சிசிடிவி காட்சி வெளியாகிப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, இந்திய ரயில்வே பாதுகாப்புப் படையினர் கடந்த வியாழக்கிழமை 43 வயதான ஒருவரை கைது செய்துள்ளனர்.

சர்வ சாதாரணமாக நடந்து செல்லும் அந்த மனிதர், பெண் அருகே சென்றதும் அவரை முத்தமிடுகிறார்.

அந்தப் பெண்ணுக்கு 20 வயது இருக்கும். அந்தப் பெண் வேலைக்குச் செல்வதற்காக உள்ளூர் ரயிலுக்காகக் காத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கனடியப் பிரதமரை கடடிப்பிடித்து வரவேற்ற மோடி

புதுடில்லி, பெப். 24

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, நேற்று இந்திய ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற போது பிரதமர் மோடி கட்டிப்பிடித்து வரவேற்றார்.

கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது குடும்பத்தினருடன் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். கடந்த சனிக்கிழமை டில்லி சென்ற அவர், தாஜ்மஹாலுக்குக் குடும்பத்தினருடன் சென்று சுற்றிப்பார்த்தார். அதன் பின், குஜராத் சென்ற அவர் காந்தி ஆச்சிரமத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

அதைத்தொடர்ந்து பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் நகரில் உள்ள பொற்கோவிலுக்குக் குடும்பத்தினருடன் சென்று வழிபட்டார்.



இந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் டில்லி திரும்பிய அவர் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

இந்நிலையில் நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகைக்குச் சென்றார். காரிலிருந்து இறங்கிய அவரை பிரதமர் மோடி கட்டிப்பிடித்து வரவேற்றார். பின்னர் அவருக்கு பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது. முப்படை அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

கனடியப் பிரதமரை மத்திய அரசு புறக்கணிப்பதாக விமர்சனம் எழுந்துள்ள நிலையில், அவருக்கு ஜனாதிபதி மாளிகையில் வரவேற்பு அளித்ததும், மோடி நேரில் சென்று வரவேற்றதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் கனடியப் பிரதமர், டில்லி ராஜ்கோட்டில் உள்ள காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். வெளியுறவுத்துறை மந்திரி சுஷ்மா சுவராஜையும் சந்தித்துப் பேசினார். (ஐ)

## அதிரடி அவதாரம்



சென்னை, பெப். 24

நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளை தேர்ந்தெடுத்து நடித்து வரும் த்ரிஷா புதிதாக நடிக்க இருக்கும் படத்துக்காக குத்துச்சண்டைப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அவர் குத்துச்சண்டைப் பயிற்சி பெறும் வீடியோவை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டு உள்ளார். அவர் ஆவேசமாக சண்டையிடுவதைப் பார்த்து ரசிகர்கள் சமூக வலைத்தளத்தில் பாராட்டி வருகிறார்கள். புதிதாக நடிக்கும் படத்துக்காக இந்த குத்துச் சண்டை பயிற்சியில் அவர் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. (ஐ)

# கொடுமைப்பட்ட அழகி

துருக்கி மற்றும் ரஷ்யாவில் பல ஆண்டுகள் தன்னை பாலியல் அடிமையாக நடத்தியதாகக் கூறி தொழிலதிபர் மீது பிரபல மொடல் அழகி ஒருவர் புகார் அளித்துள்ளார்.

உக்ரைனைச்சேர்ந்தவர் பிரபல மொடல் அழகி நடாஷா செரிப்ரி (வயது-25). அவர் தனக்கு நேர்ந்த கொடுமைகள் குறித்துக் கூறுகையில்,

கடந்த 7 ஆண்டுகளில் ஒரு நாள் கூட நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. தினசரி கொடூரமான சித்திரவதைக்கும் பாலியல் பலாத்காரத்துக்கும் உள்ளானேன்.

என்னைவிட 30 வயது மூத்த அந்த நபரைச் சந்தித்த ஒரு மாதத்திலேயே அவர் மீது ஈர்ப்பு வந்தது. ஆனால் அது எனது வாழ்க்கையையே பாழாக்கியது.

வலுக்கட்டாயமாக என்னைக் கடத்திச் சென்ற அந்த நபர், தொடர்ந்து 7 ஆண்டுகள் அடிமையாகவே நடத்தி வந்தார். இதனால் நான் இரண்டு பிள்ளைகளுக்குத் தாயானேன். 6 மாத கர்ப்பமாக இருந்த நிலையில் துருக்கி நாட்டுக்கு அழைத்துச் சென்ற அவர், ஒரு கைதி



போலவே மிகக் கொடூரமாக நடத்தினார். இதனிடையே குறித்த நபரின் முன்னாள் மனைவிக்குப் பிறந்த மகன், துருக்கிப் பொலிஸாருக்கு இது தொடர்பில் தெரிவித்தார். பின்னர் நடாஷாவை உக்ரைனுக்கு நாடு கடத்தினர்.

இருப்பினும் உக்ரைன் சென்று நடாஷாவை மீண்டும் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்று மொஸ்கோவில் உள்ள புறநகர் பகுதியில் அந்த நபர் 2 ஆண்டு காலம் சிறை வைத்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் அவரிடமிருந்து உயிர் தப்பும்போது, மிகவும் வலுவிழந்து ரத்தப்போக்கால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## நடக்க ஆரம்பித்த குண்டு இளைஞன்



மெக்சிக்கோ, பெப். 24

உலகிலேயே குண்டான ஆண் என கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த ஜுயன் பெட்ரோ பிரான்கோ, தற்போது அதிகளவு எடை குறைந்து நடக்கத்தொடங்கியுள்ளார்.

மெக்சிகோவைச் சேர்ந்தவர் ஜுயன் பெட்ரோ பிரான்கோ (வயது-33). இவரின் உடல் எடை 2016 ஒக்ரோபரில் 595 கிலோவாக இருந்த நிலையில் உலகின் மிகக் குண்டான ஆண் என அவரின் பெயர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றது.

எழுந்து நடக்க முடியாமல் படுத்த படுக்கையாக இருந்த ஜுயன், இரைப்பைச் சத்திர சிகிச்சை மூலம் 345 கிலோவாக எடை குறைந்துள்ளார்.


பல ஆண்டுகளாக நடக்க முடியாமல் இருந்த ஜுயன் தற்போது ஊன்றுகோலின் உதவியுடன் நடக்க ஆரம்பித்துள்ளார்.

## ஸ்மித்துக்கு பாடம் எடுத்த கோஹ்லி

இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லியிடமிருந்து நிறையக் கற்றுக் கொண்டதாக அவுஸ்ரேலிய அணித் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறுகையில்,

“உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களை நான் பார்த்துள்ளேன், அவர்களின் துடுப்பாட்ட முறையை நானும் செயல்படுத்த முயற்சி செய்துள்ளேன். விராட் கோஹ்லியிடமிருந்து சில விடயங்களைக் நான் கற்றுக் கொண்டேன். குறிப்பாக சுழற்பந்து வீச்சுகளை அவர் எதிர்கொள்ளும் விதம், ஒவ்சைட் திசையில் அவர் அடிக்கும் ஷொட்கள் ஆகியவற்றை நான் கற்றுக் கொண்டேன். அவற்றை நானும் பின்பற்ற, தற்போது முயற்சி செய்து வருகிறேன். நீங்களும் அவரிடமிருந்து பல விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம். கோஹ்லியைப் போலவே, டிவில்லியர்ஸிடம் இருந்தும் கற்றுக் கொண்டுள்ளேன்” எனத் தெரிவித்துள்ளார். (ஐ)





## கணக்கில் ‘வீக்’ பாகிஸ்தானின் புள்ளியைக் குறைத்த ஐ.சி.சி.

டுபாய், பெப். 24

சர்வதேசக் கிரிக்கெட் சபை விட்ட தவறால் அவுஸ்ரேலியா முதல் இடம்பிடித்தது. எனினும், தற்போது அந்தத் தவறு சரி செய்யப்பட்டதால் பாகிஸ்தான் மீண்டும் முதல் இடத்தைத் தக்கவைத்தது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையால் வெளியிடப்பட்டுவரும் ஐ.சி.சி. அணிகளுக்கான தரவரிசையில் இருபது-20 போட்டிக்கான வரிசைப்படுத்தலில் பாகிஸ்தான் முதலிடத்தில் இருந்தது.

சமீபத்தில் அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முத்தரப்பு டி20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்தை 19 ஒட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்ரேலியா வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. இந்தத் தொடர் தொடங்குவதற்கு முன்னர் அவுஸ்ரேலியா ஐந்து போட்டிகளில் தோல்வியின்றி வெற்றி பெற்றால் தரவரிசையில் முதல் இடம்பிடிக்கும் எனக்கூறப்பட்டது.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதும் ஆஸ்ரேலியா முதன்முறையாக டி20 அணிகள் தரவரிசையில் முதல் இடத்தை பிடித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கணக்குமுறை தவறாகி விட்டது. தசம அடிப்படையில் பாகிஸ்தான் அணிதான் முதல் இடத்தில் இருக்கிறது என்று ஐசிசி அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் அவுஸ்ரேலியா 125 புள்ளிகள் பெற்றுள்ளன. தசம புள்ளிகள் அடிப்படையில் அவுஸ்ரேலியா 125.65 புள்ளிகள் பெற்றுள்ளது. பாகிஸ்தான் 125.84 புள்ளிகள் பெற்று 0.19 புள்ளிகள் அதிகம் பெற்று முதல் இடத்தைத் தக்கவைத்துள்ளது. (ஐ)



## இலங்கை கொடுத்த ‘தர்ம அடி’யின் எதிரொலி

சர்வதேச டி20 தொடரிலிருந்து ஓய்வு பெற்ற மஷ்ரபே மோர்டசாவை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை மீண்டும் டி20 தொடரில் விளையாட அழைப்புவிடுத்துள்ளது.

பங்களாதேஷ் அணி, சமீபத்தில் நடைபெற்ற முத்தரப்புத் தொடர், டெஸ்ட் மற்றும் டி20 தொடர் என அனைத்திலும் தோல்வியைச் சந்தித்தது.

இதனால் சர்வதேச டி20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ள பங்களாதேஷ் அணியின் ஒருநாள் போட்டிகளுக்கான தலைவர் மோர்டசாவை டி20 போட்டிக்குத் திரும்புமாறு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஸ்முல் ஹஸன் கூறுகையில்,

இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் பங்கேற்கும் முத்தரப்புத் தொடர் இலங்கையில் நடைபெறவுள்ளது. இதற்காக வீரர்கள் தெரிவு செய்யும் கூட்டம் நடைபெற்றது. அப்போது டி20 தொடரிலிருந்து ஓய்வு பெற்றுள்ள மோர்டசா அணிக்குத் திரும்பினால், நன்றாக இருக்கும் என்று அணியின் தேர்வாளர்கள் கூறினர்.

ஏனெனில் சமீபகாலமாக சிறப்பாகச் செயல்பட்டு வந்த பங்களாதேஷ் அணி, நடந்து முடிந்த இலங்கையுடனான தொடர்களில் மிக மோசமான தோல்விகளைச் சந்தித்துள்ளது. அதுமட்டுமின்றி அணியின் மூத்த வீரர்களான சகிப் அல் ஹசன் போன்றவர்கள் காயம் காரணமாக விலகியுள்ளனர். இதனால் அணியை வழிநடத்திச் செல்ல நல்ல அனுபவம் வாய்ந்த வீரர் தேவை என்பதால், அவர் அணிக்குத் திரும்ப வேண்டும் என்று எண்ணுகிறோம். அவர் விருப்பப்பட்டால் மகிழ்ச்சியாக வரவேற்ப தாகக் கூறியுள்ளார்.(ஐ)

## சூடாகிய டோனி




செஞ்சூரியன், பெப். 24

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஓட்டம் எடுக்க மெதுவாக ஓடியதால் மனிஷ் பாண்டேவை டோனி திட்டினார். இந்த வீடியோ சமூக வலைத் தளங்களில் பரவி வருகிறது.

செஞ்சூரியனில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டி20 போட்டியில் இந்தியா துடுப்பெடுத்தாடியபோது கடைசி ஓவரில் முதல் பந்தை மனிஷ்பாண்டே அடித்துவிட்டு ஓட்டம் எடுக்க ஓடினார்.

மறுமுனையில் இருந்து டோனி 2ஆவது ஓட்டம் எடுக்க விரும்பினார். ஆனால் மனீஷ்பாண்டே பந்தை கவனித்தபடி மெதுவாக ஓடினார்.

இதனால் கோபமடைந்த டோனி மனிஷ்பாண்டேவை திட்டினார். ஹிந்தியில் பேசிய டோனி, முகத்தில் கோபத்தைக் காட்டியபடி மனீஷ் பாண்டேயை பார்த்து ஏதோ கூறினார். இதில் கடைசி வார்த்தைகள் மட்டும் தெளிவாகக் கேட்டது. அதில், அங்கே என்ன பார்த்துட்டே இருக்க? இங்க பாரு. கவனமாக இரு என்று கூறி உள்ளார்.

களத்தில் எதற்கும் கோபம் அடையாமல் சாந்தமாக இருப்பவர் என்ற பெயரைப் பெற்ற டோனி கடும் சீற்றத்துடன் பேசும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. (ஐ)

## 3ஆம் இடத்தைப் பிடித்தது வீரகத்திப்பிள்ளை ம.வி.



பருத்தித்துறை, பெப். 24

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில் மூன்றாமிடத்தைப் பெற்றது தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.

பருத்தித்துறைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில், மூன்றாமிடத்துக்கான ஆட்டம் நேற்று பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் நிர்ணயிக்கப்பட 6 ஓவர்களில 5 விக்கட்களை இழந்து 63 ஒட்டகளைப்பெற்றது. பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வேலாயுதம் மகா வித்தியாலயம் 6 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 31 ஒட்டங்களையே சேர்த்தது. இதன் மூலம் 32 ஒட்டங்களால் வெற்றிபெற்ற வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றது. (ஐ-66)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 24.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.